# யூலை – 08 – பொதுக்கால 14ம் வார ஞாயிறு

**“சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்பு பெறுவர்” (மாற்.6:4)**

## முதல் வாசகம் : ஏசேக்கியல் 2: 2 – 5

அந்நாட்களில் ஆண்டவர் என்னோடு பேசுகையில் ஆவி என்னுள் புகுந்து என்னை எழுந்து நிற்கச்செய்தது. அப்போது அவர் என்னோடு பேசியவற்றைக்கேட்டேன்.அவர் என்னிடம், ”மானிடா! எனக்கெதிராகக் கிளர்ச்சிசெய்யும் இனத்தாராகிய இஸ்ரயேல் மக்களிடம் நான் உன்னை அனுப்புகிறேன். இன்றுவரை அவர்களும் அவர்களுடைய மூதாதையரும் எனக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து கலகம் செய்துள்ளனர்” என்றார்.”வன்கண்ணும் கடின இதயமும்கொண்ட அம்மக்களிடம் நான் உன்னை அனுப்புகிறேன். நீ அவர்களிடம் போய், “தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே“ என்றுசொல்.கலகவீட்டாராகிய அவர்கள், செவிசாய்த்தாலும் சாய்க்காவிட்டாலும், தங்களிடையே ஓர் இறைவாக்கினர் வந்துள்ளார் என்பதை அறிந்துகொள்ளட்டும்“ என்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே எமக்கு இரங்கும்வரை எம் கண்கள் உம்மையே நோக்கியிருக்கும்.

## இரண்டாம் வாசகம் : 2 கொரிந்தியர் 12 : 7 – 10

சகோதர சகோதரிகளே! எனக்கு அருளப்பட்ட ஒப்புயர்வற்ற வெளிப்பாடுகளால் நான் இறுமாப்பு அடையாதவாறு பெருங்குறை ஒன்று என் உடலில் தைத்த முள்போல் என்னை வருத்திக் கொண்டே இருக்கிறது. அது என்னைக் குத்திக் கொடுமைப்படுத்த சாத்தான் அனுப்பிய தூதனைப்போல் இருக்கிறது. நான் இறுமாப்படையாதிருக்கவே இவ்வாறு நடக்கிறது.அதை என்னிடமிருந்து நீக்கிவிடுமாறு மூன்றுமுறை ஆண்டவரிடம் வருந்தி வேண்டினேன்.ஆனால் அவர் என்னிடம், ”என் அருள் உனக்குப் போதும் வலுவின்மையில்தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்” என்றார். ஆதலால் நான் என்வலுவின்மையைப் பற்றித்தான் மனமுவந்து பெருமை பாராட்டுவேன். அப்போது கிறிஸ்துவின் வல்லமை என்னுள் தங்கும்.ஆகவே என்வலுவின்மையிலும்இ இகழ்ச்சியிலும்இ இடரிலும்இ இன்னலிலும்இ நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கிறேன். ஏனெனில் நான் வலுவற்றிருக்கும்போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன்.

## நற்செய்தி : மாற்கு 6 : 1 – 6

அக்காலத்தில் இயேசு தமது சொந்த ஊருக்கு வந்தார். அவருடைய சீடரும் அவரைப் பின்தொடர்ந்தனர்.ஓய்வுநாள் வந்தபோது அவர் தொழுகைக்கூடத்தில் கற்பிக்கத் தொடங்கினார். அதைக் கேட்டபலர் வியப்பில் ஆழ்ந்தனர். அவர்கள், ”இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்துவந்தன? என்னே இவருக்கு அருளப்பட்டுள்ள ஞானம்! என்னே இவருடைய கைகளால் ஆகும் வல்ல செயல்கள்! இவர் தச்சர் அல்லவா! மரியாவின் மகன்தானே! யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவர் சகோதரிகள் இங்கு நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா?” என்றார்கள். இவ்வாறு அவரை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயங்கினார்கள்.இயேசு அவர்களிடம், ”சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம்வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப்பெறுவர்” என்றார்.அங்கே உடல் நலமற்றோர் சிலர்மேல் கைகளை வைத்துக் குணமாக்கியதைத் தவிர வேறு வல்லசெயல் எதையும் அவரால் செய்ய இயலவில்லை.அவர்களது நம்பிக்கையின்மையைக் கண்டு அவர் வியப்புற்றார். அவர் சுற்றிலுமுள்ள ஊர்களுக்குச் சென்று கற்பித்துவந்தார்.

**தியானம்:** இறைவாக்கினர் என்பவர் கடவுளுக்கும், மனிதருக்கும் ஒரு இணைப்பு பாலமாக செயல்படுபவர். இறைவாக்கினர் என்பவர் கடவுளின் வாயாகவும், கடவுளின் இதய ஏக்கங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் உன்னதமான பணியை செய்பவர். அதே நேரத்தில் மக்களின் அழுகுரலை ஆண்டவர் பாதம் சேர்க்கும் பரிந்துரையாளராகவும் செயல்படுகின்றவர். இறைவாக்கினர் என்பவர் தமக்காக வாழாமல் தன்னையே பலியாக்கி கடவுளையும் மனிதரையும் ஒன்றிணைக்கும் பணியில் தன்னையே இழப்பவர். “தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன், நீ பிறக்கு முன்பே உன்னைத் திருநிலைப் படுத்தினேன், மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்’’ என்று எரேமியாவை அழைத்த கடவுள், எரேமியாவை தான் சொல்லக் கூடிய இடத்திற்குச் செல்லவும், தான் கட்டளையிடுவதை மட்டுமே மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற இதய வாஞ்சையோடு அவரை அழைக்கின்றார், அனுப்புகின்றார். இதே போன்று இறைவாக்கினர் எசேக்கியலையும் கடவுள் அழைத்து கடவுளின் பெயரால் எச்சரிக்கை செய்யவும் மக்களை கண்டித்து திருத்தவும் வேண்டும் என்று விரும்புகின்றார். உண்மையான கடவுளின் ஊழியர்கள் இத்தகைய பணிகளை செய்யவே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். தங்களுடைய சுய விருப்பங்களை, தேவைகளை, கருத்துக்களை செய்திகளாக மாற்றி கடவுள் பெயரால் அறிவிக்க அல்ல மாறாக தேவனுடைய விருப்பம், ஏக்கம் என்ன என்பதை அவரது பிரசன்னத்தில், காலடியில் அமர்ந்து, அவர் குரல் கேட்டு, எதையும் கூட்டவோ குறைக்கவோ செய்யாமல், அதனை அப்படியே மக்களுக்கு அறிவிப்பதே உண்மையான ஊழியர்களின் பணி. அவ்வாறு உண்மையை உள்ளவாறு எடுத்துரைக்கும் போது மக்கள் நம்மை வெறுக்கலாம், தூற்றலாம், விமர்சனங்கள் செய்யலாம், துன்பங்களைத் தரலாம் ஆனால் உண்மையான இறைவாக்கினர்கள் இதற்கெல்லாம் அஞ்சாமல் செயல்பட வேண்டும். மக்களை திருப்தி படுத்துவதில் அல்ல மாறாக கடவுளுக்கு உண்மையுள்ள ஊழியனாக திகழ்வதையே தங்களுடைய இலக்காகக் கொண்டு செயல்பட வேண்டும். நம்மை விமர்சனங்கள் செய்பவர்களுக்காக, நம்மைத் துன்புறுத்துபவர்களுக்காக பயந்து கடவுளுடைய செய்தியை எடுத்துரைக்காமலிருக்கக்கூடாது.